பெ. சரண்யா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மண்மங்கலம் - கரூர்.

# படைப்பிலக்கியம்

## படைப்பிலக்கியம் ஓர் அறிமுகம்:

தற்கால இலக்கியங்களில் முதன்மை பெறும் அளவிற்கு படைப்பிலக்கியம் அமைந்துள்ளது. இலக்கியத்தின் பல்வேறு கூறுகளை மாணவர்கள் அறிய முடிகிறது.

படைப்பிலக்கிய மொழியின் தன்மை அறிவுறுத்தப்பட்டு கவிதைஇ நாடகம்இ உரைநடைஇ சிறுகதைஇ ஆகியவற்றின் தனித்தன்மைகள் கற்றுக் கொள்ளப்படுகிறது.

"தாமாகவோ ஒரு பொருண்மையில் படைப்பை உருவாக்க வேண்டும்"என இயங்குவதே படைப்பிலக்கியம் ஆகும்.

## மாணவர்கள் பெறும் திறன்கள்:

✓தமிழில் யாப்பிலக்கண மரபை மாணவர்கள் அறிந்து கொள்ள முடிகிறது.

✓ இலக்கிய படைப்பாக்கத் திறனை மாணவர்கள் பெறுவர்.

✓ சிறுகதையாளராகவோஇ கவிதையாளராகவோஇ நாடக எழுத்தாளராகவோஇ நிகழ்ச்சி தொகுப்பாளராகவோஇ கட்டுரையாளராவோ தன்னை உருமாற்றி ஜொலிக்க கூடிய வாய்ப்பை மாணவர்கள் பெறுவர்.

## அலகு 1

## சிறுகதை

### சிறுகதையின் இலக்கணம் :

வாழ்க்கையின் ஒரு சின்னஞ்சிறு சலனமோ நிகழ்ச்சியோ சிறுகதையாக இடம் பெறும் . 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிறுகதையின் பொதுவான தன்மைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது அதன் அடிப்படையில் சில வரைமுறைகளை கூறியுள்ளனர்.

### அவையாவன:

1. அளவில் சிறியதாக இருத்தல் வேண்டும்.

2. தனிமனித வாழ்க்கை அல்லது சமுதாயத்தை பிரதிபலிக்க வேண்டும் .

3.ஒரு மனிதர் அல்லது உணர்வு அல்லது நிகழ்ச்சி அல்லது சிக்கல் என ஏதாவது தலைதூக்கி இருக்க வேண்டும்.

4. அளவிற்கு அதிகமான கதைமாந்தர்கள் இடம்பெறக்கூடாது.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

5.அளவிற்கு சிறியதாக இருந்தாலும் முழுமை பெற்று இருக்க வேண்டும்.

6.விரிவான வர்ணனை சூழ்நிலைக்கு சிறுகதை இடம் தருதல் கூடாது.

7.குறைவான சொற்கள் பொருள் தரக் கூடியதாக இருக்க வேண்டும்.

8.பாத்திரங்களின் உரையாடல்கள் சொட்டு அவசியம்.

9.நம்பக்கூடிய உண்மைத் தன்மையில் கதை அமைய வேண்டும்.

10.ஆள விதையைப் போல விரிவான கதை கருவை கொண்டிருத்தல் வேண்டும்.

11.படைப்பாளரின் கலையாற்றல் கற்பனைத்திறன் சொல்லாட்சி மறைமுகமாக கூற விரும்பும் செய்தி இவை அனைத்தும் இலக்கண வரம்பை விட முக்கியமானவை.

**சிறுகதையின் தொடக்கம்**:

✓குதிரை பந்தயம் போன்று விறுவிறுப்பாய் அமைதல் வேண்டும்.

✓யானை உருவத்தைச் செதுக்குவதற்கு ஒப்பானது ஆகும்.

✓யானை - குதிரை உருவத்திற்கு மாற்றம்

யாதிரை - குனையாக உருவம் மாறி சிறுகதை கெடக்கூடும்.

✓எனவே சிறப்பாக சிறுகதை அமைய வேண்டுமாயின் தொடக்கம் சிறப்பானதாக இருக்க வேண்டும்.

**சிறுகதையின் உச்சநிலை**

- ✓ வாசகர்கள் எதிர்பாராத வகையில் உணர்ச்சிக் கொந்தளிப்பின் உச்சியில் கதையை முடிக்கும்
- ✓ படைப்பாளரின் தனித்தன்மையை உச்ச நிலையே தீர்மானிக்கிறது.
- ✓ படிப்பவருக்கு எதிர்பார்ப்பை உண்டாக்கி கதையை வெற்றி பெறச் செய்யும்.

**எ. கா**: கல்கி--- ”கோதாவரியின் தாயர்”

**சிறுகதையின் முடிவு**

- ✓ தொடக்கம் போன்றே முடிவும் முக்கியத்துவம் பெறுதல் வேண்டும்.
- ✓ முடிவு நன்மை அல்லது தீமையானதாக அமையலாம்.
- ✓ சில சமயம் கதை தலைப்பே முடிவாகும்.

எ.கா : நா. பார்த்தசாரதி- உண்மை பேசு ஜெயகாந்தன்- வேலை கொடுத்தவன் புதுமைப்பித்தன்- திண்ணை பேர்வழி சோ மு.-மங்கலம்.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

## சிறுகதையின் அமைப்பு

- ✓ தொடங்கி உச்ச நிலைக்குச் சென்று முடிவு வரை படிப்பவரின் கவனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும்.
- ✓ படிப்பவரை சோர்வடையச் செய்யக் கூடாது கதை உணர்ச்சி உடையதாய் அமைதல் வேண்டும்.
- ✓ மக்களுக்கு நம்பிக்கையூட்டி சமுதாயத் தேவையை நிறைவு செய்யும் பாங்கில் அமைதல் வேண்டும்.
- ✓ படைப்பாளன் கதையில் இன்னும் உணர்ச்சி தான் அமைய வேண்டும் என்பதை முடிவு செய்து கொள்ள வேண்டும்.

## உணர்ச்சிகள்

காதல் -வீரம் – நகை - வெறுப்பு

அச்சம்- சாந்தம்- கருணை என ஒன்றோ பலவோ இடம்பெற வேண்டும்.

- ➢ இலிருந்து 2 மணி நேரத்திற்குள் படித்து முடிக்க கூடியதாக இருத்தல் வேண்டும்.
- ➢ பக்கத்தை கருத்தில் கொள்ளாமல் கருத்தை கொண்டு கதையின் நீளம் தீர்மானிக்கவேண்டும்.

எளிய நடை அமைப்பில் அமைதல் வேண்டும்.

## தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடி

**முதல் சிறுகதை - குளத்தங்கரை அரசமரம்**

தமிழ் சிறுகதை உலகின் தந்தை தமிழ்ச் சிறுகதையின் தந்தை - **வ.வே.சு ஐயர்**.

சிறுகதை மன்னன் சிறுகதைச் செல்வர் தமிழ்நாட்டின் மாப்பசான்- புதுமைப்பித்தன்

மௌனி (எ)மணி - சிறுகதை உலகின் திருமூலர்.

## சிறுகதை வளர்ச்சிக்குரிய பிற காரணிகள்

- ➢ இதழ்கள் சிறுகதை போட்டி வைத்து எழுத்தாளர்கள் எண்ணிக்கையை அதிகப் படுத்துகிறது.
- ➢ சிறுகதைத் தொகுப்பு பரிசு திட்டங்களால் வளர்ச்சி பெற்றுள்ளது.
- ➢ அயல்நாட்டார் ஆல் வளர்ச்சி (எ. கா) சிங்கப்பூர் மலேசியா எழுத்தாளர்கள்.
- ➢ தொழில் நுட்பமான இணையங்களிலும் வளர்ச்சி பெற்றுள்ளது. (எ.கா) WhatsApp, Facebook, app & வலைப்பூக்கள்.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

- சிறுகதை ஏற்றுவதன் மூலம் மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் பயன் பெறுவர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

**சிறுகதை பொருள்** :

✓தனிமனித சிக்கல்

✓குடும்ப சிக்கல்

✓சமூகச் சிக்கல்

✓பொருளாதாரச்

✓சிக்கல் நாட்டு

✓விடுதலை

**சிறுகதையின் தலைப்பு**:

1.கதையின் தொடக்கத்தில் வைத்து அமையும் தலைப்பு

2.கூறும் பொருளை வைத்து அமையும் தலைப்பு

3.மையப் பாத்திரத்தின் பொருளை வைத்து அமையும் தலைப்பு

4.முடிவை வைத்து அமையும் தலைப்பு.

**சிறுகதை உத்திகள்**

✓நடை

✓நோக்குநிலை

✓பாத்திரப்படைப்பு

**சிறுகதை வகைகள்**

1.கருக்கதை

2. நிகழ்ச்சி கதை

3.உணர்ச்சி கதை

4.பாத்திர கதை

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

**சமுதாய சிக்கலை மையமாகக்கொண்ட சிறுகதைத் தலைப்பு :**

- ✓ தீண்டாமை
- ✓ வறுமை
- ✓ பெண்களின்
- ✓ பிரச்சனை நகர
- ✓ வாழ்வியல்
- ✓ ஆண் பெண் நட்பு
- ✓ பொதுவுடைமை
- ✓ பார்வை
- ✓ பொருளாதார
- ✓ ஏற்றத்தாழ்வு
- ✓ காதல்
- ✓ பெண்ணடிமை தனம்
- ✓ மனிதநேயம்
- ✓ பெண் விடுதலை
- ✓ பணத்தின் ஆதிக்கம்

போன்றவை சமுதாய சிக்கலை மையமாகக் கொண்டவை ஆகும்.

இது போன்ற பிற தலைப்பில் மாணவர்களை 5 பக்கங்களுக்குள் எழுத செய்தல் வேண்டும்.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

## அலகு - 2

## மரபுக்கவிதை புதுக்கவிதை எழுதுதல்

**புதுக் கவிதை இலக்கணம்:**

கவிதைக்குரிய மரபு இரக்கமற்ற ஒரு கவிதை அதாவது சீர்இ தளைஇ அடிஇ தொடை என்னும் கட்டுப்பாடுகளை கொண்டு காணப்படுவது மரபுக்கவிதை அவற்றை புறந் தள்ளுவதாக அமைந்ததே புதுக்கவிதை ஆகும்.

**தோற்றம்**

ஆங்கிலத்தில் new poetry modern poetry என அழைக்கப்பட்ட கவிதை வடிவம் தமிழுக்கே உரிய மரபில் புதுக்கவிதையாகத் திகழ்கிறது.

**அமைப்பு**

✓அடி வரையறை கிடையாது.

✓ஒவ்வொரு அடியிலும் குறிப்பிட்ட சீர்கள் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

✓சொற் சுருக்கம் இருக்க வேண்டியது முக்கிய அம்சமாகும்.
✓பேச்சுவழக்குச் சொற்கள் இடையே ஒலிநயம் காணப்படுவது பொதுவானதாகும்

✓சிறப்பான தமிழ்ச் சொற்களுடன் வடமொழி ஆங்கிலம் பேச்சுவழக்குச் சார்ந்த சொற்களும் காணப்படுகின்றது.

✓எதுகை மோனை இயைபு தொடை நயங்கள் கட்டாயமில்லை

✓அடி வரையறை செய்து எழுதும்போது மரபுக்கவிதை போன்று தோற்றமளிக்கும்.

✓வசனநடை உரை நடையால் சிறப்பாக புதுக்கவிதை எடுத்தாளப்படுகிறது.

**புதுக்கவிதையின் தந்தை - ந. பிச்சமூர்த்தி**

**புதுக்கவிதைக்குரிய தலைப்புகள்**:

காதல், வாழ்க்கை, இயற்கை, நட்பு, அன்பு, காதல், தோல்வியின் போது அம்மா, பிரிவு, தமிழ், சமூகம், அழகு, அரசியல், பாசம், வழி, பெண் போன்ற எண்ணங்களுக்கு ஏற்ப தலைப்பைக் கொடுத்து இருபது அடிகளுக்கு மிகாமல் புதுக்கவிதை எழுத பலகச் செய்தல் வேண்டும்.

**புதுக் கவிதை இலக்கணம் கோட்பாடு**

1) எதையும் நேர்முகமாக கூறவேண்டும் பொருளின் ஆன்மாவை உடனே தேட வேண்டும்.

2) பொருள் தராத சொல்லையும் பயன்படுத்த கூடாது

3) தட்டுப்பாடும் தடையும் இல்லாத ஓசை ஒழுங்கைக் கையாள வேண்டும்.

4) இன்றைய சமூக வாழ்க்கைச் சிக்கலை காட்ட வேண்டும்

5) சொற்களையும் சிந்தனைகளையும் மழுப்பாமல் உடைத்து புது வளத்துடன் கையாள வேண்டும்

6) வாழ்க்கை நியமங்களை புதிய வடிவில் எடுத்துக் கூறவேண்டும்

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

## புதுக்கவிதை ஆசிரியர்கள்

✓பாரதியார்

✓நா. பிச்சமூர்த்தி

✓புதுமைப்பித்தன்

✓வல்லிக்கண்ணன்

✓கு.ப ராஜகோபாலன்

✓வைத்தீஸ்வரன்

✓சி மணி

✓சி.சு.செல்லப்பா

✓திரு சிவராமு

✓பசுவய்யர்

✓புவியரசு

✓ஆத்மராம்

✓கல்யாண்ஜி

✓சிற்பி

✓மீரா

✓மேத்தா

✓அப்துல் ரகுமான்

✓தமிழன்பன் நான்

✓காமராசன்

✓இன்குலாப்

✓தமிழ்நாடன்

✓கலாப்பிரியா

✓அக்னிபுத்திரன்

✓வைரமுத்து

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

**புதுக்கவிதை**

**"என்னுடைய சம்பள நாளில்**

**எண்ணி வாங்குகிற பளபளக்கும் நோட்டுக்களில் எவரெவர் முகமோ தெரியும்**

**என் முகம் தவிர"**

புதுக்கவிதை இதுபோன்று எதார்த்தத்தை உணர்த்த வேண்டும்.

**மரபுக்கவிதை குறிப்புகள்**

ஆசிரியப்பா, வெண்பா என்னும் பா வகைகளும்இ ஆசிரிய விருத்தம்இ கலி விருத்தம் என்னும் பாவினங்களும் மட்டுமே இன்றைய நிலையில் மரபுக் கவிதை வகையில் செல்வாக்குப் பெற்று வருகின்றன. பா வகைகள் சீர், தளை, பிறழாதன பாவின வகைகள் குறிப்பிட்ட வாய்பாடுகளில் அமையும் நான்கு அடிகளை உடையன.

"ஆசில்பர தாரமவை அஞ்சிறை அடைப்போம்

மாசில்புகழ் காதலுறு வேம்வளமை கூரப்

பேசுவது மானம்இடை பேணுவது காமம்

கூசுவது மானுடரை நன்றுநம கொற்றம்" (கம்பராமாயணம்)

இப்பாடல் அளவடி நான்கு கொண்டு அமைவதாகிய கலிவிருத்தமாகும். கும்பகருணன், தன் அண்ணன் இராவணனிடம், ""அடுத்தவனின் கற்புப் பிறழாத மனைவியைக் கொண்டுவந்து சிறையில் அடைப்போம் ஆனால் புகழை எதிர்பார்ப்போம் மானத்தைப் பேசுவோம் காமத்திற்கு அடிமையாவோம் மானுடர் இழிந்தவர் என்போம் மானிடப் பெண்டிரை நயப்போம் நன்றாக இருக்கிறது. அண்ணா, நம்முடைய வெற்றி பொருந்திய அரசாட்சி!"" என்று அரசவையில் துணிந்து நையாண்டி செய்கிறான். இது இராவணனுக்கு மட்டும் கூறப்பட்டதன்று எக்காலத்திற்கும் சராசரி மனிதனின் அடிமனத்தில் நிலவும் தகாத காம உணர்வைத் திருத்தி நெறிப்படுத்தத் தக்கதாகவும் உள்ளது. ஒலிநயமும் இனியதாக உள்ளது.

**அமைப்பும் போக்கும்**

நமது தமிழ் இலக்கியத்தில் உள்ள சங்க இலக்கியப் பாடல்கள்இ பக்தி இலக்கியப் பாடல்கள் முதலிய அனைத்தும் மரபுக்கவிதையைச் சார்ந்தவை.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

## வெண்பாவின் அமைப்பு

மரபுக்கவிதைக்கு ஓர் எடுத்துக்காட்டான வெண்பா யாப்பைப் பார்ப்போம்.

வெண்பாவின் ஈற்றடி முச்சீர்களாகவும், ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் இருக்கும்.

ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகளில் ஒன்றைப் பெற்று முடியும்.

செப்பலோசை பெற்று வரும்.

## எடுத்துக்காட்டு

நளன் தமயந்தி ஆகியோரின் கதையைக் கூறும் நளவெண்பா வெண்பாவால் எழுதப்பட்டது. காட்டிலே காதலியைக் காரிருளில் கைவிட்டு நளன் சென்று விடுகிறான் தன்னந்தனியாகத் தமயந்தி துயர்ப்படுகின்றாள். இத்துயரைக் காணப்பொறாதுஇ கோழிகள் இறகுகளால் தங்கள் வயிற்றிலடித்துக் கொண்டு சூரியனை விரைவில் தேரேறி வருகவென்று அழைப்பன போலக் கூவின என்று ஆசிரியர் புகழேந்தி கற்பனை செய்கிறார்.

## மரபுக்கவிதை ஆசிரியர்கள்

✓ராமலிங்க அடிகளார்

✓பாரதியார்

✓பாரதிதாசன்

✓கவிமணி நாமக்கல்

✓கவிஞர் சுத்தானந்த பாரதி

✓து.சு .யோகியார்

✓கண்ணதாசன்

✓சுரதா

✓முடியரசன்

போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

**சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்தே**
**துஞ்சிடோம் - இனி- அஞ்சிடோம்**
**எந்த நாட்டிலும் இந்த அநீதிகள்**
**ஏற்குமோ-தெய்வம் - பார்க்குமோ?**
**வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை**
**வாழ்த்துவோம்- முடி தாழ்த்துவோம்**

## அலகு - 3

## ஓரங்க நாடகம்

**குறிப்புகள்** :

✓ ஓரங்க நாடகம்(one-act-play) என்பது ஒரு நிகழ்ச்சியை அல்லது உணர்வை ஒரு சில களங்களில் முழுமைப்படுத்திக் காட்டும் நாடகம் ஆகும்.

✓ ஓரங்க நாடகங்களில் ஒரு காட்சி மட்டுமே இருக்க வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை.

✓ ஒன்றுக்கு மேற்பட்ட காட்சிகள் அடங்கி ஒரு நாடகம் உருவாகலாம். பண்டைய கிரேக்கத்தில், "சைக்ளோப்ஸ்" என்ற ஓரங்க நாடகத்தை யூரிபீடிஸ் இயற்றியுள்ளார். இது பண்டைய கால உதாரணமாகும்

**எ.கா** :

ஆடே திருடு போகலீங்கய்யா - ஓரங்க நாடகம்

**கதைமாந்தர்கள்**:

நாட்டாமை, குமாரசுவாமி, வக்கீல், மகேஸ்வரராவ், ராஜி, பஞ்சாயத்து போர்டு வக்கீல், பவானி, அன்பழகன், சுப்பிரமணியன் சாமி.

**இடம்** : நாட்டாமை ஆலமரம்

**நாட்டாமை** : பவானி ஆதாரம் எங்கே?

**பவானி**: அய்யா, இப்படி மொட்டையா கேட்டீங்கன்னா எப்படி? எதுக்கு ஆதாரம்?

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

**நாட்டாமை** : இது என்னா கேசு?

**சொம்பு** : சொத்துக் குவிப்பு வழக்குங்க

**நாட்டாமை** : யார் சொத்து குவிச்சா - ஆதாரம் என்ன? சொத்து யாருடையது?

இவ்வாறு ஒரு நிகழ்வை மையமாக வைத்து ஒரு காளமோ அல்லது நான்கு ஐந்து களங்கலோ அமைத்து இயற்றும் அளவிற்கு மாணவிகளை எழுதச் செய்து பயிற்சி அளிக்க வேண்டும்.

## அலகு - 4

## நேர்முக வர்ணனை

**வர்ணனை விளக்கம்:**

1) நேரில் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும்படி அழகுற விவரித்து உரைத்தல் புனைவுரை

2)புகழ்ச்சி தோத்திரம்

**ஆங்கில மொழிபெயர்ப்புகள்**

* description,

* narration;

* commentary;

* delineation

* praise

**நேரடி வர்ணனைக்கு பயன்படுபவை** :

1)இலக்கியப் பயன்பாடு

2)இலக்கணப் பயன்பாடு

**நேர்முக வர்ணனை வகை:**

1) தொலைக்காட்சி

2) வானொலி

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

கோயில் திருவிழா,

கலை இலக்கிய விழா,

பண்பாட்டு நோக்கு விழா,

விளையாட்டு விழா

ஆகியவற்றிற்கு சிறப்பான முறையில் நேர்முக வர்ணனை வழங்கப்படுகிறது

**(வானொலியில்) விளையாட்டு வர்ணனை**

விளையாட்டை நேரில் கண்டறிய முடியாதவர்களுக்கு வானொலி மூலம் கேட்கும் வகையில் 1921-ம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் தேதி முதல் முதன் முறையாக வானொலி வர்ணனை செய்யப்பட்டது.

**எ.கா:**

பந்தை பந்துவீச்சாளரே தடுத்தெடுக்க ஓட்டத்திற்கான வாய்ப்பு எதுவும் இல்லை. 2 விக்கெட் இழப்பிற்கு 112 ஓட்டங்கள். மீண்டும் பட்டாபிராம் மூளையிலிருந்து கோர்ட்னிவால்ஸ்இ சுனில் கவாஸ்கரை நோக்கி ஒவ்வொரு நொடியும் நம்மை பந்தோடு பயணிக்க வைத்தது கிரிக்கெட் பற்றிய வானொலி வர்ணனை எனப்படும்.

**கோயில் வர்ணனை**

கோயிலின் பெருமைகள், சிறப்புகள், தலி தீர்த்தம், விருட்சம், நாயகன், நாயகி பற்றி கூறப்பட்டு பாடல்கள், காட்சிகள், சாமி புறப்படுதல் பக்தர் வருகை கடல் வெள்ளம் போல் பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறது சாமி மக்களின் வேண்டுதலை கேட்டு செவி சாய்த்து அருள்பாலிக்கிறார்.

கோயிலில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளும் கூறப்பட்டு கொண்டே இருக்கும்.

கலை இலக்கிய விழா வர்ணனை திருவிளக்கு ஏற்றி நிகழ்ச்சி ஆரம்பமாகிறது.

- ✓ வரவேற்புரை
- ✓ தலைமையுரை

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

✓ வாழ்த்துரை

✓ சிறப்புச் செய்தல்

✓ சிறப்புரை 1

✓ சிறப்புரை 2

✓ பின்னூட்டம்

✓ நன்றியுரை

✓ நாட்டுப்பண்

குறிப்பிட்ட பெயர்ச் சொல்லில் மேற்கோள் வர்ணனை கொடுத்து மேடைக்கு அழைக்க வேண்டும்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் நிகழ்ச்சி ஆரம்பம் முதல் இறுதிவரை தொகுத்து வழங்கும்.

நிகழ்ச்சி நிரலுக்குப் பொருந்த மாதிரி மாறுபட்டு அமையும். இதை எழுதச்சொல்லி மாணவ மாணவிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்

**பண்பாட்டு நோக்கு விழா:**

சமூகம் மற்றும் சமுதாயத்திற்கு பெரிதும் உதவும் வகையில் கொண்டாடப்படுவது பண்பாட்டு நோக்கு விழா ஆகும்.

உதாரணமாக:

✓ பொங்கல் விழா

✓ சமய விழா

பாரம்பரிய திணையும் கொண்டாட்டத்தையும் வர்ணனை செய்தல்.

வானொலிக்கு சற்றே விளக்கமும் வர்ணனையும் அதிகம் தேவைப்படும் ஆனால் தொலைக்காட்சியில் அதற்கான தேவை அதிகம் இருக்காது.

இதனை மனதில் நிறுத்தி மாணவர்களை வர்ணனை எழுத பழகச் செய்தல் வேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் 5 மாதிரிகளை எழுதச் செய்து பயிற்சி அளித்தல் வேண்டும்.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

பெ. சரண்யா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மண்மங்கலம் - கரூர்.

## அலகு - 5

## உரைநடை கட்டுரை

### கட்டுரையின் அமைப்பு வடிவம் சார்ந்த வகைகள்

கட்டுரை பல வடிவங்களில் அமையலாம் ஆனால் எல்லா கட்டுரைகளையும் 4 வகைக்குள் அடக்கி விடலாம்.

1) வர்ணனை உரைநடை

2) விளக்க உரை நடை

3)நிகழ்ச்சி கட்டுரை

4)விவாதக் கட்டுரை

### மரபு வழியில் வகைகள்:

1) விளக்கக் கட்டுரை

2) வர்ணனை கட்டுரை

3) கற்பனைக் கட்டுரை

4) வரலாற்றுக் கட்டுரை

5) தன்னுணர்ச்சி கட்டுரை

6) அவங்க கட்டுரை

7) புகழ்ச்சி கட்டுரை

8) விமரிசனக் கட்டுரை

9) ஆராய்ச்சி கட்டுரை

### துறை வழியில் கட்டுரை வகைகள்:

✓இலக்கிய கட்டுரை

✓ இலக்கணம் கட்டுரை

✓ மொழியில் கட்டுரை

✓ வரலாற்றுக் கட்டுரை

✓ சமய கட்டுரை

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

✓ சமூகவியல் கட்டுரை

✓ நாட்டுப்புறவியல் கட்டுரை

✓ இலக்கிய ஆய்வுக் கட்டுரை

✓ தத்துவ ஆய்வு கட்டுரை

✓ உளவியல் ஆய்வு கட்டுரை

✓ தன்வரலாற்று கட்டுரை

✓ அரசியல் கட்டுரை

ஒருவர் தம் உள்ளக் கருத்துகளை வெளியிடும் வாயில்களாக அமைவன, அவர்தம் பேச்சும் எழுத்தும் ஆகும். இவற்றுள் எழுதுதல் என்பது, தனித்திறன். அவ் எழுத்து, கதையாகவோ, கட்டுரையாகவோ வெளிப்படலாம். கட்டுரை எழுதும் திறன் பற்றி இங்குக் காண்போம்.

'ஒரு பொருளைப் பற்றி இலக்கண முறையில் கட்டுரைப்பது கட்டுரை.' 'கட்டுரையாவது வகைப்படுத்திக் கூறுதல்.' உள்ளத்தில் தோன்றுவதைக் கட்டுரைப்பது கட்டுரை. 'அழகு நிரம்பிய உரையைக் கட்டுரை என்கிறோம்'. இவ்வாறு, அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர்.

சுருக்கமாகக் கூறினால், குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றி, ஒரு கட்டுக்கோப்புடன் யாவரையும் ஈர்க்கும் முறையில் அமைக்கப்படுவதைக் 'கட்டுரை' எனலாம்.

## கட்டுரை அமைப்பு

இனி, கட்டுரையின் அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் காண்போம். எந்தப் பொருளைப் பற்றிக் கட்டுரை எழுதினாலும் அது, முன்னுரை - பொருளுரை - முடிவுரை ஆகியவற்றைக் கொண்டு விளங்க வேண்டும்.

முன்னுரையும் முடிவுரையும் ஒவ்வொரு பத்திக்குள் அமைய வேண்டும்.

முன்னுரையானது, எழுதப் புகும் கருத்தை வகுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும். முடிவுரையானது சொல்லப்பட்ட கருத்துகளைத் தொகுத்துக் கூறுவதாக அமைய வேண்டும். ஒரு கட்டுரையில் முன்னுரையையும் முடிவுரையையும் படித்தாலே கட்டுரையின் சிறப்புத் தன்மை விளங்க வேண்டும்.

பொருளுரையானது, எடுத்துக்கொண்ட கருத்தைப் பல வழிகளில் விளக்கிக் கூறும் பகுதி ஆகும். ஆதலின் அதைப் பல பத்திகளாகப் பிரித்து எழுதுதல் வேண்டும். எடுத்துக்கொள்ளும் பொருளுக்கு ஏற்ப, உள் தலைப்புகள் பலவற்றைக் கொண்டதாகப் பொருளுரை விளங்க வேண்டும்.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

கட்டுரையானது, சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நன்மொழி புணர்த்தல் முதலான அழகுகளைப் பெற்றிருக்க வேண்டும். கூறியது கூறல், மாறுகொளக் கூறல், மற்றொன்று விரித்தல் முதலான குற்றங்கள் இல்லாமல் எழுதப்பட வேண்டும். இனி, கட்டுரை எழுதுவோர் கருத்திற்கொள்ள வேண்டிய சில பொதுவிதிகள்.

1. செய்திகளைத் திரட்டுதல்
2. முறைப்படுத்துதல்
3. தலைப்புக் கொடுத்தலும் பத்தி அமைத்தலும்
4. மேற்கோள்கள் - பழமொழிகள் திரட்டுதல்
5. பல்வகை வாக்கியங்களில் எழுதுதல்
6. நடை அழகு
7. நிறுத்தக் குறியீடுகள் பயன்படுத்தி எழுதுதல்
8. நல்ல கருத்துகளை எடுத்தாளும் திறன்
9. மீள் பார்வை செய்தல்
10. நல்ல கையெழுத்தில் எழுதுதல்.

**கட்டுரை எழுதுவதற்கு உரிய பண்புகள்**:

✓கட்டுரைக்கு பொருள் அல்லது கருத்தை இன்றியமையாதது. எனவே தலைப்பு பற்றிய பொருள்களை சேகரிக்க வேண்டும்.

✓தலைப்பு வரையறுக்கப்பட வேண்டும்.

✓பொருள்களை சுருக்கமாக போதுமான விளக்கம் உடையதாக அமைய வேண்டும்.

✓சிறந்த கருத்துச் செறிவுடன் அமைய வேண்டும்.

✓ எதற்கு பின் எது கூறப்பட வேண்டும் பொருள் ஒருமைப்பாடு இருக்க வேண்டும்.

✓ கட்டுரை அளவு குறிப்பிட்ட நீளம் உடையதாக இருக்க வேண்டும். இதன் பகுதி சம அளவு உடையதாக இருக்க வேண்டும்.

✓ கட்டுரை பொருள் தோற்றம்இ வளர்ச்சிஇ முடிவு என்ற அமைப்பு உட்பட்டு இருக்க வேண்டும்.

✓ கட்டுரையின் மையப்பொருள்இ எல்லையை வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

✓மொழிநடை எளிமை தெளிவு பொருள் செறிவு நேரிடையாக பொருளை உணர்த்தும் இயல்பான நடையில் இருத்தல் வேண்டும்.

✓நடை அழகுக் கொண்டும் மொழி நடை உத்திகள் கொண்டும் பின்பற்ற வேண்டும்

**கட்டுரை எழுதும்பொழுது தவிர்க்கப்பட வேண்டியவை:**

1)பொருள் விளக்கம் இன்றி கூறுதல்

2) அளவுக் கதிகமான சொற்களில் கூறல்

3) கூறிய விஷயங்களை மீண்டும் மீண்டும் கூறல்

4)குற்றமுள்ள சொற்பிரயோகம் பயன்பாடு சந்தேகம் ஏற்படுமாறு கூறல்.

5)சந்தேகம் ஏற்படுமாறு கூறல்

6) முரண்பட கூறல்

7) வெற்றுச் சொற்கள் இடம் பெறல்

8) கூற வந்த பொருளை விட்டு வேறொன்றை விளக்குதல்.

9)சொல் பொருள் என்பன நலிவடைந்து செல்லுதல்.

**அறிவியல் சார்ந்த கட்டுரை தலைப்பு** :

✓அறிவியல் தமிழ்

✓அறிவியலின் வளர்ச்சி

✓தமிழன் அறிவியலின் முன்னோடி

✓அறிவியல் துறையின் வளர்ச்சி

✓அறிவியல் வளர்ச்சி சாதனையா

✓அறிவியல் மனப்பான்மை

✓இந்தியாவின் அறிவியல் முன்னேற்றம்

✓அறிவியல் ஆக்கத்திற்கே

✓உலகத்தை இயக்குவதில் அறிவியலின் பங்கு

✓சுதந்திர இந்தியாவின் அறிவியல் வளர்ச்சி

✓அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி

**உளவியல் சார்ந்த கட்டுரை தலைப்பு**

✓கற்றல் உளவியல்

✓கல்வி உளவியல்

✓குழந்தை உளவியலும் கல்வியும்

✓தமிழ் சமுதாயத்தின் உளநலம்

✓மனமே மகிழ்ந்திடு

✓பொது உளவியல் ஓர் அறிமுகம்

✓ உளநலமுடன் நாம்

✓ உயர்வு உங்கள்களதே!

✓ ஆண் பெண் விழிப்புணர்வு.

**சமூகவியல் சார்ந்த கட்டுரை தலைப்பு:**

* சமூகவியல் ஒரு கற்கை
* இனவரைவியல்
* கருத்தியல்கள்
* சமூக வலைப்பின்னல்கள்
* சமூக கோட்பாடு
* சமூக தத்துவம்
* சமூகப் பாகுபாடு
* சமூகவியலாளர்கள்
* பெண்ணியல்
* உலக அமைதி

**கல்வியல் சார்ந்த கட்டுரை தலைப்பு:**

* விழுமக் கல்வி
* நுண்ணறிவு சார்ந்த பன்முக காரணிகள்
* பண்டைய கல்வி இயல்
* கல்வி முறையில் மாற்றம்

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

* முறைசார் கல்வி
* கல்வியில் தத்துவங்கள்
* தொழில்நுட்பம் சார்ந்த கல்வி

**பொருளியல் சார்ந்த கட்டுரை:**

✓ திருக்குறளில் பொருளியல் கருத்துக்கள்

✓ நுண்ணிய பொருளாதாரம்

✓ பொருளாதாரச் சிந்தனை வரலாறு

✓ இஸ்லாமிய பொருளியல் சிந்தனை

✓ நவீன செம்மைப் பொருளியல் சிந்தனை

✓ இலக்கியத்தின் பொருளியல் சமூகம்

✓ சமூகவியல் நோக்கில் பொருளாதாரம்.

இதுபோன்ற பல தலைப்புகள் கொடுத்து முன்னுரை முடிவுரை உள்ளடக்கம் 8 தலைப்புகள் கொடுத்து ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் கட்டுரை எழுத பயிற்சியளித்தல்.

**பார்வை நூல்கள்:**

கா.கோ. வேங்கடராமன் - தமிழ் இலக்கிய வரலாறு - விஜயா பதிப்பகம்

முனைவர் ச. ஈஸ்வரன் - தமிழ் இலக்கிய வரலாறு சாரதா பதிப்பகம்

இணையதள முகவரி:

1.http://podhutamizh.blogspot.com

2.www.scribd.com

3.khiyamahi.wordpress.com

4.neelamegan.wordpress.com

5.www.sirukathaigal.com

6.www.tamilmantram.com

7.www.agaramuthali.com

8.arunaiodmp.blogspot.com

9.www.tamilvu.org>degree >html

10.www.kayalnews.com

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

**வினாக்கள்**

**அலகு 1**

1.அளவில் சிறியதாக இருக்கும் கதை எது?

2. சிறுகதையின் இலக்கணம் கூறுக

3. சிறுகதையின் அமைப்பு கூறுக

4. சிறுகதையின் தந்தை யார்?

5. தமிழில் தோன்றிய முதல் சிறுகதை யாது?

6. இயற்கை என்னும் தலைப்பில் சிறுகதை எழுதுக

7. நீ விரும்பும் தலைப்பில் சிறுகதை ஒன்று எழுதுக

**அலகு - 2**

1.புதுக் கவிதையின் இலக்கணம் கூறுக

2. புதுக்கவிதையின் இரட்டையர் யாவர்

3.தமிழில் புதுக்கவிதையின் தோற்றம் பற்றி கூறுக

4.புதுக் கவிதையின் பாடுபொருள் யாது

5.புதுக்கவிதையின் பண்புகள் கூறுக

6.புதுக்கவிதையில் படிமம் குறியீடு பற்றி விவரி

7.ஹைக்கூ கவிதைகளும் சமுதாயமும்

8.நீ விரும்பும் தலைப்பில் கவிதை எழுதுக

**அலகு - 3**

1.ஓரங்க நாடகம் பற்றி குறிப்பு வரைக

2. ஒரு காட்சியை மட்டும் குறிப்பிடும் நாடகம் எது?

3. நீ விரும்பும் தலைப்பில் ஓரங்க நாடகம் எழுதுக?

**அலகு - 4**

1.நேரில் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துவது எது?

2.நேரடி வர்ணனைக்கு பயன்படுபவை எவை?

3. நேர்முக வர்ணனை என்றால் என்ன

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்

4. வானொலியின் விளையாட்டு வர்ணனை பற்றி எடுத்துரைக்க

5. கோவில் வர்ணனை பற்றி கூறுக

6.கலை இலக்கிய விழா வர்ணனையை வரிசைப்படுத்துக

7. பண்பாட்டு நோக்கு விழா என்றால் என்ன

**அலகு - 5**

1 கட்டுரையின் வகைகளை சுட்டுக.

2.மரபுவழிப்பட்ட கட்டுரையின் வழிகளை விளக்குக.

3. துறையின் அமைப்பு முறையை பற்றி எடுத்துரைக்க.

4. துரை எழுதுவதற்குரிய பண்புகளை எடுத்துரைக்க.

5. கட்டுரை எழுதும்பொழுது தவிர்க்க வேண்டிய வழிமுறைகளை எடுத்துரைக்க

6. அறிவியல் சார்ந்த தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக

7. உளவியல் சார்ந்த தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதுக

8.நீ விரும்பும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக

அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்